வணிக வித்தியம்
The Journal of Business Economics and Management Studies - JBEMS
Faculty of Commerce & Management
Eastern University, Sri Lanka.

# சுயதொழில் முயற்சியில் ஈடுபடுகின்ற பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தில் தாக்கஞ்செலுத்தும் காரணிகள் பற்றிய கருத்துப் பகிர்வு : மட்டக்களப்பு மாவட்ட மண்முனை வடக்குப் பிரதேசசெயலாளர் பிரிவை மையமாகக்கொண்ட ஆய்வு

*ஷியாளினி ஹேமப்பிரகாஷ்*
*வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*
shiyalini06@gmail.com

**Abstract**

Female-headed families, who take family responsibility alone without the support of men, engage in self-employment to contribute to the economic development of the country and fulfil their livelihood too. However, women entrepreneurs face various challenges and risks to lead their life. Although various assistances are provided from the government and private levels for the livelihood development of women self-employed entrepreneurs, it is questionable whether their quality of life has improved as expected. Therefore, this study has been conducted based on 100 self-employed entrepreneurs from the Manmunai North DS Division in Batticaloa District, a poverty-stricken district in the eastern part of Sri Lanka. They were randomly selected using purposive sampling method with the aim of finding the factors influencing the quality of life of female self-employed entrepreneurs and their influence on people's quality of life. Factors that determine the standard of living of self-employed women are identified through reliability analysis and Likert Scale analysis of variables such as housing infrastructure, movable and immovable property, education, health, income, savings, investment etc. According to the results, factors such as housing infrastructure, movable and immovable property, education, health, income have been found to influence the standard of living of self-employed entrepreneurs at a high level and savings and investments at a medium level. Further, this study concluded that self-employment plays an important role in improving the quality of life of female self-employed entrepreneurs. The study also recommends that the government and the private sector should act proactively in promoting the savings habit, which is less common among women self-employed entrepreneurs, providing investment advisory services, providing employment opportunities and wide credit facilities at low interest rates.

**Keywords:** Self-employment, Women headed families, Livelihood development, Standard of living, Batticaloa

**ஆய்வுச் சுருக்கம்**

ஆண்களின் துணையில்லாமல் தனித்து குடும்பப்பொறுப்பை ஏற்று வழிநடத்துகின்ற பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் பெருமளவில் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதனூடாக தமது வாழ்வாதாரத்தைப் பூர்த்திசெய்வதோடு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்புச்செய்கின்றனர். இருப்பினும் பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் தமது வாழ்க்கையை கொண்டுநடாத்துவதில் பல்வேறுபட்ட சவால்களையும் இடர்களையும்

*Corresponding* shiyalini06@gmail.com

*© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.*

எதிர்கொள்கிறார்கள். அரசாங்க மற்றும் தனியார் மட்டங்களிலிருந்து பெண் சுயதொழில் முனைவோரின் வாழ்வாதார அபிவிருத்திக்காகப் பல்வேறு உதவிகள் வழங்கப்படுகின்ற போதிலும் அதன் மூலமாக அவர்களின் வாழ்க்கைத் தரமானது எதிர்பார்த்தளவிற்கு மேம்பட்டதா என்பது கேள்விக்குறியே. அந்தவகையில் பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகளையும் அவை மக்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தினையும் கண்டறியும் நோக்குடன் இலங்கையில் வறுமைகூடிய மாவட்டங்களுள் ஒன்றான மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண் சுயதெயாழில் முயற்சியாளர்கள் அதிகம் வாழும் மண்முனை வடக்கு பிரதேசசெயலாளர் பரிவிற்குட்பட்ட கருவப்பங்கேணி, நொச்சிமுனை, திராய்மடு, சின்ன ஊறணி, இருதயபுரம் மேற்கு மற்றும் வெட்டுக்காடு ஆகிய ஆறு கிராமசெயலாளர் பிரிவுகளில் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களிலிருந்து எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்ட 100 சுயதொழில் முயற்சியாளர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை தீர்மானிக்கும் காரணிகளாக வீட்டுத்துறைக்கான உட்கட்டமைப்பு வசதி, அசையும் அசையா சொத்து, கல்வி, சுகாதாரம், வருமானம், சேமிப்பு, முதலீடு போன்ற மாறிகள் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவுகளுடன் நேர்காணல் அவதானம் மூலமும் தரவுகள் பெறப்பட்டு likert scale ஆய்வு முறையினைப் பயன்படுத்தி மாறிகள் தொடர்பான திருப்தி மட்டமானது SPSS கணனி மென்பொருளில் பகுப்பாய்வுசெய்யப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகளின்படி, வீட்டுத்துறைக்கான உட்கட்டமைப்பு வசதி, அசையும் அசையா சொத்து, கல்வி, சுகாதாரம், வருமானம் போன்ற காரணிகள் உயர்ந்த அளவிலும் சேமிப்பு மற்றும் முதலீடுகள் நடுத்தர அளவிலும் சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் தாக்கத்தைச்செலுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுகளை மொத்தரீதியாக பார்க்கும்போது பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தினை முன்னேற்றுவதில் சுயதொழில் முயற்சியானது உயர்ந்தளவில் தாக்கத்தைச் செலுத்துகின்றமை (மாறிகளின் திருப்தி மட்டம் தொடர்பான முழுமொத்த சராசரிப் பெறுமதி 3.715) புலனாகின்றது. மேலும் ஆய்வு முடிவுகளின்படி பெண் சுயதொழில் முயற்சியாளர்களிடையே குறைவாகக் காணப்படுகின்ற சேமிப்பு பழக்கத்தினை ஊக்குவித்தல் மற்றும் முதலீட்டு ஆலோசனைச் சேவைகளை வழங்குவது தொடர்பில் அரசாங்கமும் தனியாரும் முனைப்புடன் செயற்பட முன்வரவேண்டும் என இவ்வாய்வானது சிபார்சுசெய்கின்றது.

**முதன்மைச் சொற்கள்:** சுயதொழில் முயற்சி, பெண்தலைமைத்துவக் குடும்பங்கள், வாழ்வாதார அபிவிருத்தி, வாழ்க்கைத் தரம், மட்டக்களப்பு

## 1.அறிமுகம்

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பானது மிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் பெண் அடிமைத்தனம் பெண்களுக்கு எதிரான சமூக ரீதியான கட்டுப்பாடுகள் போன்ற காரணங்களால் கல்வி கற்றல், தொழில் புரிதல் போன்ற செயற்பாடுகளில் பெண்கள் சுயமாக ஈடுபடுவது மறுக்கப்பட்ட ஒன்றாகக் காணப்பட்டதுடன் குறைந்த அளவிலான பெண்களே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆனால் தற்காலத்தில் பெண்களின் உரிமை, பெண்களின் அபிவிருத்தி, பெண்களின் சுதந்திரம் என்பன முக்கியம் பெற்றுள்ளதுடன் பெண்களின் செயற்பாடுகளில் முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்த வரையில் சமூக, பொருளாதார, அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளதுடன் குறிப்பாக பொருளாதார நடவடிக்கைகளான சேவைத்துறை, கைத்தொழில், ஆடைக்கைத்தொழில், பெருந்தோட்டத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு,

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

சுயதொழில் முயற்சி போன்றவற்றில் பெண்களின் பங்களிப்பு தற்போது அதிகரித்துவருகின்றது. குறிப்பாக உலகின் முதலாவது பெண் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்கள் 1960 களில் இலங்கையிலிருந்து தோற்றம் பெற்றமை இதற்குச் சிறந்த சான்றாகும்.

தற்போது இலங்கையின் மொத்த சனத்தொகையான 22 மில்லியனில், பெண்கள் 11,542,022 ஆகவும் மொத்த சனத்தொகையின் வீதமாகப் பார்க்கும்போது 52.09 வீதமாகவும் ஆண்களைக் காட்டிலும் அதிகமாகக் காணப்படுகின்றனர் (மத்தியவங்கி ஆண்டறிக்கை, 2021). பால்ரீதியாக பெண்களின் தொழிற்படைப் பங்குபற்றலை நோக்கும்போது, இலங்கை சுதந்திரம் பெற்ற ஆரம்ப காலப்பகுதியான 1950 களில் மொத்த ஊழியப்படையில் 18 வீதமாகக் காணப்பட்ட பெண்களின் தொழிற்படை பங்குபற்றல் வீதமானது 2019 களில் 34.2 வீதமாக வளர்ச்சி கண்டுள்ளது (மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2019). தற்போது நாட்டின் மொத்த உற்நாட்டு உற்பத்திக்கு 29 வீதத்தினை பெண்கள் நேரடியாக வழங்குகின்றனர். இது பாக்கிஸ்தான் (11%), இந்தியா (18%), பங்களாதேஸ் (19%) போன்ற தெற்காசிய நாடுகளில் பெண்களின் பொருளாதாரரீதியான பங்களிப்பை விட உயர்வாகும். அதிலும் குறிப்பாக ஆண்களின் துணையில்லாமல் குடும்பத்தை வழிநடத்துகின்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பொருளாதாரரீதியான பங்களிப்பும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

"பெண் தலைமைக் குடும்பம் என்பது ஆண்கள் துணையில்லாத குடும்பத்தின் பொருளாதார மற்றும் ஏனைய விடயங்களைப் பெண்கள் தாமே பொறுப்பேற்று வழிநடத்துவதாகும்" (உலகவங்கி அறிக்கை, 2007). மேலும், "கணவனை இழந்த பெண்களும், கணவனால் கைவிடப்பட்டு பிரிந்து வாழும் பெண்களும் பொருளாதாரத்தைக் கணவனால் ஈட்டமுடியாத பெண்களும் குடும்பப் பொறுப்பை தாமே ஏற்று வழிநடத்துவதாகும்" என சர்வதேச தொழிலாளர் அமைப்பு பெண்தலைமைத்துவக் குடும்பங்களை வரையறை செய்கிறது (உலகவங்கி அறிக்கை, 2007). இப் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் உருவாவதற்கு பல காரணிகள் பெண்ணியல் வாதிகளால் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் கணவன் இறந்து போதல், கணவனைப் பிரிந்திருத்தல், கணவனால் பொருளாதாரம் ஈட்ட முடியாத தன்மை, பெற்றோரை இழந்த மூத்த ஆண் இல்லாத குடும்பம், விவாகரத்துப் பெற்றிருத்தல், போர்ச்சூழலால் காணாமல் போதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இப்பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் பெரும்பாலானோர் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடாத்துவதற்காக சுயதொழில் முயற்சி நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபடுகின்றனர்.

இலங்கையின் பொருளாதாரத்தில் சுயதொழில் முயற்சியானது மிக முக்கிய வருவாய் ஈட்டும் மூலாதாரமாகக் காணப்படுகின்றது. இலங்கையில் 42.4 சதவீதமானோர் சுயதொழிலில் ஈடுபடுவதன் மூலம் தமது வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்கின்றனர் (உலகவங்கி அறிக்கை, 2015). நாட்டின் சுயதொழில் முயற்சியில் பெண்களின் பங்களிப்பானது தற்காலத்தில் அதிகரித்து வருகின்றது. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத் தரவுகளின்படி, இலங்கையில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட பதிவுசெய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி நிறுவனங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 24.8 வீதமானவை பெண்களுக்கு உரித்தானவையாக காணப்படுகின்றன. இவ் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி நிறுவனங்களில் அதிகளவில் பெண்களே ஈடுபடுத்தப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக உள்நாட்டு யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மாகாணங்களில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், பொருளாதாரரீதியாக வருமானம் உழைத்துக்கொள்ளவும் தமது வாழ்க்கையை கொண்டு நடாத்தவும் சுயதொழில் முயற்சிகளில் அதிகம் ஈடுபடுகின்றனர்.

அந்தவகையில் குடும்பங்களைத் தலைமைதாங்கும் நபர் யார் என்ற அடிப்படையில், ஆண் பெண் பாலினவேறுபாடின்றி ஒன்றில் தலைமைதாங்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றனர் அல்லது சில சந்தர்ப்பங்களில் தலைமைதாங்கும் பொறுப்பிற்கு தள்ளப்படுகின்றனர்.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

அண்மைக்காலத் தரவுகளின்படி, குடும்பத்தை தலைமைதாங்கும் நபர் தொடர்பான பாலினம் சார் விடயங்களை பார்க்கையில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பினை காணமுடிகின்றது.

**அட்டவணை 1: வடகிழக்கு மாகாணங்களில் மாவட்டரீதியாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை**

| மாவட்டம் | பெண்தலைமைத்துக் குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மட்டக்களப்பு | 47,608 |
| அம்பாறை | 41,226 |
| திருகோணமலை | 24,481 |
| யாழ்ப்பாணம் | 32,765 |
| வவுனியா | 14,389 |
| கிளிநொச்சி | 7,710 |
| மன்னார் | 4,675 |
| முல்லைத்தீவு | 7,529 |

மூலம்: வீட்டுத்துறை வருமான மற்றும் செலவுப் பகுப்பாய்வு கணக்கறிக்கை, 2016.

மேற்படி புள்ளிவிபரங்களின்படி, இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே கூடுதலாகப் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக ஆய்வுப் பிரதேசமான மட்டக்களப்பு மாவட்டத்தில் சனத்தொகை கூடிய மண்முனை வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள 48 கிராமசேவகர் பிரிவுகளிலும் மொத்தமாக 4,253 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வாழ்கின்றனர். மேலும் இங்கு 4,163 பேர் விதவைகளாக உள்ளனர். இங்குள்ள பெண்தலைமைத்துவக் குடும்பங்களில் உள்ள பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடாத்துவதற்கு சுயதொழில் முயற்சி நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபடுகின்றனர் (மண்முனை வடக்கு பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு வருடாந்த கணக்கெடுப்பு அறிக்கை, 2021).

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் பெண்களின் பொருளாதார பங்களிப்பானது 15.7 சதவீதமாக காணப்படுகின்றது. இங்குள்ள பெண்களின் சுயதொழில் முயற்சிகளாக தெங்குசார் உற்பத்திகள், உணவு உற்பத்திகள், சிறு வியாபாரம், தையல் வேலைகள், அழகுக்கலை போன்ற துறைகளில் சுய தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு தொழிற்பயிற்சிகள், தொழில்நுட்பக்கல்வி, கடன் மற்றும் மானியங்கள் போன்ற கொடுப்பனவுகள் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றால் வழங்கப்பட்டு வருவதோடு, சிறு அளவிலான கைத்தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளையும் வேலைத்திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றன (மண்முனை வடக்கு பிரதேச செயலக அறிக்கை, 2021).

சுயதொழில் முனைவோருக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் கடன் மற்றும் மானியங்கள், அவர்களின் கல்வி அறிவு, குடும்பப்பின்னணி, தொழிற் பின்னணி, உற்பத்தியில் காணப்படும் சந்தை வாய்ப்பு, அனுபவம் போன்றவை உற்பத்தியை அதிகரிப்பதற்கான மூலாதாரங்களாக காணப்படுகின்றன (Fasliya, 2016). கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் 33.2 வீதமானோர் சுயதொழில் முயற்சிகளினூடாக வாழ்க்கையை நடாத்திச் செல்பவர்களாகவே காணப்படுகின்றனர். இதனுள் பகுதி நேரமாகவும் சுயதொழில் முயற்சிகளை செய்பவர்கள் அதிகமாக காணப்படுகின்றனர்.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

ஆய்வுப் பிரதேசமான மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவில் மொத்த சனத்தொகையான 92,058 பேரில், பெண்கள் 47,081 (51.1%) பேராகக் காணப்படுகின்றனர். இங்கு பெணக்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை 4,253 ஆகக் காணப்படுவதொடு 1,687 பெண்கள் சுயதொழில் செய்பவர்களாக காணப்படுகின்றனர். இங்கு உள்ள மக்கள் பிரதானமாக ஆடு, மாடு, கோழி வளர்த்தல், தென்னைசார் உற்பத்திகள், பனைசார் உற்பத்திகள், கைத்தறி ஆடை உற்பத்தி, அழகுக்கலை தொடர்பான தொழில்கள், தையல் உற்பத்திகள், உணவு உற்பத்திகள் மற்றும் சிறு வியாபார நடவடிக்கைகள், கைவினைப் பொருட்கள், பால் உற்பத்திப் பொருட்கள், காளான் மற்றும் மரமுந்திரிகை உற்பத்தி போன்ற பல்வேறுபட்ட சுயதொழில்களில் ஈடுபடுகின்றனர் (மண்முனை வடக்கு பிரதேச செயலக அறிக்கை, 2020).

இச்சுயதொழில் வகைகளில் தற்போது கால மாற்றத்திற்கேற்ப தொழில்நுட்பம் சில இடங்களில் பயன்படுத்தப்பட்டு அச்சுயதொழில் மேலும் விருத்தியடைந்து இதன் மூலம் இலாபத்தையும் சந்தை வாய்ப்பையும் அதிகரித்துக்கொள்கிறார்கள். ஆனால் சகல இடங்களிலும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதில்லை. மேலும், இப்பிரதேசத்தில் அரசாங்க நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் அதிகளவான உதவிகளைச் செய்கின்றன. பிரதேச செயலகம் ஒன்றினால் சுயதொழில் முயற்சி செய்பவர்ளை ஊக்குவிக்கும் பொருட்டு 100,000 ரூபா வரையிலான கடன் நடவடிக்கைகளும் ஏற்படுத்தி கொடுக்கப்படுகின்றது. மேலும் அரசாங்கத்தால் கிராமசேவையாளர் பிரிவுரீதியாக சுயதொழில் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் தனிநபரின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் வீட்டுத்தோட்டம் செய்து வீட்டுத்தோட்ட காய்கறி உற்பத்தியாக்கல், கோழி வளர்ப்பு, ஆடு, மாடு போன்ற கால்நடை வளர்ப்பு, உணவு தயாரிப்பு போன்றவற்றுக்காக உதவிகளைப் புரிந்து வருகின்றது. இருப்பினும் இங்குள்ள பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் தமது வாழ்க்கையை கொண்டுநடாத்துவதில் பல்வேறுபட்ட சவால்களையும் இடர்களையும் எதிர்கொள்கிறார்கள்.

மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெண் சுயதொழிலாளர்களை ஊக்கப்படுத்துவதற்காக பிரதேச செயலகம், பெண்கள் அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள் மூலம் மத்திய நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் பெண்கள் என்ற ரீதியில் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடாத்துவதில் பல்வேறுபட்ட சவால்களை பிரச்சினைகளை இவர்கள் எதிர்கொள்கிறார்கள். ஆகவே, இப் பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை தீர்மானிக்கும் காரணிகளை இனங்கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டியது அவசியமாகும்.

### 1.2 ஆய்வுப்பிரச்சினை

இலங்கையில் கிழக்கு மகாணத்தில் வறுமை கூடிய மாவட்டமான மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்முனைவடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெண்தலைமைத்துவக் குடும்பங்களில் பெண்கள், வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்காக சுயதொழில் முயற்சி நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபடுகின்றனர். இங்கு வடகிழக்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பெருப்பாலான பெண்கள் அகதிகளாக்கப்பட்டு கணவனை இழந்தும் வாழ்கின்றனர். இப்பிரதேச செயலாளர் பிரிவில் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகம் காணப்படுகின்ற கருவப்பங்கேணி, நொச்சிமுனை, திராய்மடு, சின்ன ஊறணி, இருதயபுரம் மேற்கு மற்றும் வெட்டுக்காடு ஆகிய கிராமசெயலாளர் பிரிவுகளில் பெரும்பாலான பெண்கள் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடாத்த சுயதொழில் முயற்சிகளில் அதிகம் ஈடுபடுகின்றனர். இருப்பினும் பெண்கள் என்ற ரீதியில் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடாத்துவதில் பல்வேறுபட்ட சவால்களை இவர்கள் எதிர்கொள்கிறார்கள். வறுமையானது இவர்களுக்கு முன்னால் இருக்கின்ற முக்கியமான பிரச்சினையாகும். இவர்களின் சுயதொழில்

*© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.* 

நடவடிக்கைகளுக்கான நிதித் தேவையானது பூர்த்தி செய்யப்படாது காணப்படுவதால் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளும் தோல்வியையே தருகின்றன (பிரதேச செயலக அறிக்கை, 2020).

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் பெண்களின் சுயதொழிலை அதிகரிப்பதற்கும் மேம்பாட்டிற்காகவும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறு இருந்தாலும் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சியினையோ வாழ்க்கைத்தர முன்னேற்றத்தினையோ அடைய முடியாத நிலையே காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் கல்வியறிவு குறைந்தோரே அதிகளவாக சுயதொழிலில் ஈடுபடுகின்றனர். மேலும் அதிகளவான வருமானத்தினை ஈட்டமுடியாத நிலைமையே காணப்படுகின்றது. எனவே இவ்வாய்வானது பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகள் ஏற்படுத்தும் தாக்கம் யாவை எனும் வினாவிற்கு விடை காண்பதாக அமையும்.

### 1.3 ஆய்வு நோக்கங்கள்

**பிரதான நோக்கம்**

- பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகள் அவர்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பான மாதிரிகளின் திருப்தி நிலையை அளவிடல்

**துணை நோக்கம்**

- பெண் சுயதொழிலாளர்களின் சமூக பொருளாதார அடைவுமட்டத்தினை இனங்காணுதல்.

## 2. இலக்கிய மீளாய்வு

இலங்கையின் மொத்த சனத்தொகையில் கிராமப்புறங்களிலேயே அதிக மக்கள் (81.14 சதவீதம்) வாழ்கின்றனர் (இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2021). இவ் கிராமிய மக்களின் வருமானம் மற்றும் ஏனைய பிரச்சனைகளுக்கு நுண்நிதிகடன்கள் தீர்வு காண்பதால் இது குறித்து அரசாங்கங்கள் அதிக கவனம் செலுத்துகிறது. அரசாங்கம் வறுமையின் தீவிரத்தன்மையை குறைக்கும் முகமாக நுண்பாக நிதியிடல் மூலம் சிறுதொழில் முயற்சியாளர்க்கு பல சமூகநல சேவைகளை வழங்கி வருகின்றது. இந் நிதியிடல் முறையில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புகள் முக்கியமானதாகும் (உலகவங்கி அறிக்கை, 2008). வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் பெண்களின் ஊழியப்படை பங்கு பற்றலுக்கு ஆதரவளிக்கும் முக்கிய கூறுகளில் ஒன்றாக சுயதொழில்கள் காணப்படுகின்றன. வாழ்நாளில் சுயமாக வாழ்வதற்கான வருமான வளத்தினை வழங்குவதுடன் குறிப்பாக பெண்களுக்கு வீட்டில் இருந்துகொண்டு அவர்களது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வீட்டினை நிர்வகிப்பதற்குரிய அதிகாரத்தினையும் வழங்குகின்றன. இந்தியாவில் 80 % பெண்கள் வீட்டிலிருந்து மேற்கொள்கின்ற சுய தொழில்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது (Srivastara, 2009).

ஈரானில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்திற்கும் அதனைத் தீர்மானிக்கும் காரணிகளுக்குமிடையிலான தொடர்பினைக் கண்டறியும் நோக்கில் Solhi et al. (2016) என்பவர்களால் ஈரானின் டெக்ரான் மாநிலத்திலுள்ள நலன்புரி நிலையங்களிலிருந்து எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்ட 180 பெண்தலைமைத்துவக் குடும்பங்களை மையமாகக்கொண்டு 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளின்படி, ஆய்வுப் பிரதேசத்தில் பெண்களின் வாழ்க்கைத் தரமானது நடுத்தரமட்டத்தில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. பௌதீகரீதியான அம்சங்கள் பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினைத் தீர்மானிப்பதில் அதிகம் செல்வாக்குச் செலுத்துவதோடு உயர்ந்த இடைப்பெறுமானத்தினைக் கொண்டும் (50.35) காணப்படுகின்றது. மாறாக, சுற்றுச்சூழல்

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

அம்சங்கள் பெண்களின் வாழ்க்கைத் தரத்தினைத் தீர்மானிப்பதில் குறைந்தளவில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதோடு ஆகக்குறைந்த இடைப் பெறுமானத்தினைக் கொண்டும் (37.82) காணப்படுகின்றது. மேலும் பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த பொருத்தமான தலையீடுகளை வடிவமைக்கவேண்டியது அவசியமென்றும் இவ்ஆய்வில் உணர்த்தப்பட்டுள்ளது.

நுண்கடன் மூலமான சுயஉதவிக்கடன்கள் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வதை நோக்காகக் கொண்டு இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வின் முடிவின்படி, வழங்கப்படுகின்ற நுண்கடன் மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் தமது வறுமை நிலையிலிருந்து மீள முடிவதோடு வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு உதவுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது (Silva, 2007). Abd Rani மற்றும் Hasim (2017) என்பவர்களினால் பெண் தொழில் முனைவோர் வெற்றியை பாதிக்கும் காரணிகள் என்ற தலைப்பில் மலேசியாவை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மனித மூலதனம், தொடர்பாடல் வலையமைப்பு, நிதியுதவிகள், தொழிற்பயிற்சிகள், மற்றும் சந்தை வாய்ப்புக்கள் என்பன பெண் தொழில் முயற்சியாளர்களின் வெற்றியைத் தீர்மானிக்கும் காரணிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன.

நுண்பாக நிதியும் கிழக்கிலங்கை கடலோர சமூகத்தில் வறிய மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியும் என்ற தலைப்பில் வாழ்க்கைத்தர விருத்தியில் நுண்கடன் செலுத்தும் தாக்கத்தை மதிப்பிடுவதை பிரதான நோக்காக கொண்டு முதலாம் நிலை தரவுகளை பயன்படுத்தி பிற்செலவு அணுகுமுறை ஊடாக திருகோணமலை மாவட்டத்தினை ஆய்வுப்பிரதேசமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நுண்நிதி வழங்கப்பட்ட பின்னர் மக்களின் வருமானமானது 67% அதிகரித்துள்ளது எனவும் கால்நடை துறையில் கோழிவளர்ப்பதன் மூலம் வருமானத்தை அதிகமாக பெற்றுக் கொள்ள முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது (Thileepan and Thiruchelvam, 2011). நுண்கடன் திட்டம் மற்றும் சுயதொழில் முயற்சிகள் என்ற கட்டுரையில் பெண் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படும் நுண்கடன்கள் அவர்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை அறிந்து கொள்வதை நோக்காகக் கொண்டு பங்களாதேசிலுள்ள லாம்பொக் என்ற தீவினை மையமாக கொண்ட மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், மக்களின் வருமானம் 96$ இலிருந்து 112$ ஆக அதிகரித்துள்ளது எனவும் இவற்றில் 90 சதவீதமான வருமானமானது வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் அதிகரிப்பு வீதமாக உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது (Rosintan and Kathleen, 1999).

இதேபோன்று பெண்களது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதில் நுண்கடன்களின் தாக்கத்தினை அளவிடுதலை நோக்கமாக கொண்டு “கிராமிய சமூகத்தில் பெண்களினுடைய வாழ்வாதாரத்தின் மீது நுண்பாக நிதி ஏற்படுத்தும் தாக்கம்” என்னும் தலைப்பில் 2005, 2006 ஆம் ஆண்டுகளை அடிப்படையாகக் கொண்டு Ferka (2011) என்பவரால் கானா நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வருமானம், சேமிப்பு, முதலீடு என்பன பெண்களின் வாழ்க்கைத்தரத்தினையும் சுயதொழில் மூலமான இலாபத்தினையும் உயர்த்தும் காரணிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் ஆய்வு முடிவுகளின்படி, நுண்கடன் பெறுவதற்கு முன்னர் 37.8 வீதத்தினர் மாத்திரமே நல்ல சுகாதார நிலையில் இருந்துள்ளனர் ஆனால் நுண்கடனை பெற்றதன் பின்னர் 69.3 வீதத்தினர் நல்ல சுகாதார நிலையை பெற்றுக்கொள்கின்றனர் எனவும் இதன் மூலமாக பெண் சுயதொழிலாளர்களின் சுகாதார நிலமைகள் மேம்பட்டுள்ளமை முடிவாக முன்வைக்கப்பட்டுள்ளன.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

மேலும், வறுமை ஒழிப்பின் மீதான நுண்நிதியின் தாக்கம் என்ற கட்டுரையில் பாகிஸ்தானின் பஹாவல்பூர் மாவட்டத்தில் முதலாம் நிலை தரவுகளைப் பயன்படுத்தி விவரணரீதியான ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு சுயதொழிலாளர்களில் 67 வீதமானவர்களின் வருமானமானது சுயஉதவிக்கடன்களை பெற்று கொண்டதன் மூலம் அதிகரித்துள்ளது எனவும் இதன் மூலமாக அவர்களது வாழ்க்கைத்தரமட்டம் அதிகரித்துள்ளமை முடிவாக பெறப்பட்டுள்ளன (Ayuub, 2013). மேலும், ஏழை மக்களின் வாழ்க்கைத்தரத்தை அதிகரிப்பதிலும் வலுவூட்டுவதிலும் வறுமையைக் குறைப்பதிலும் நுண்கடனின் தாக்கம் எனும் கட்டுரையில், வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்ட மாற்றத்தை மதிப்பீடு செய்வதற்கான சார்ந்த மாறியாக வருமானம் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆய்வு முடிவின்படி நுண்கடன் பெற்றுக்கொண்டதன் பின்னர் வருமானமானது 11.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளதோடு வருமானம் மீது நுண்கடன் நேரான தாக்கத்தை செலுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது (Khan and Rahman, 2007).


இலங்கையைப் பொறுத்தமட்டில் நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக விளங்குகின்ற பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தினை தீர்மானிக்கும் காரணிகளை கண்டறியும் நோக்குடன் மிகவும் வரையறுக்கப்பட்ட அளவிலான ஆய்வுகளே வெளிவந்துள்ளன. எனவே இவ்வெற்றிடத்தை பூர்த்திசெய்யும் வகையில் இவ்வாய்வானது முன்னெடுக்கப்படுகிறது.

## 3. ஆய்வு முறையியல்

### 3.1. ஆய்வு எண்ணக்கருவாக்கம்

சுயதொழில் என்பது பிரதானமாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டி வரும் துறையாக காணப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவில் பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகள் ஏற்படுத்தும் தாக்கத்தைக் கண்டறியும் நோக்குடன் **வருமானம், உட்கட்டமைப்பு வசதி, அசையும் அசையா சொத்து, சுகாதாரம், கல்வி, முதலீடு, சேமிப்பு** என்பன சாரா மாறிகளாக கொள்ளப்பட்டுள்ளன. பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை தீர்மானிக்கும் காரணிகள் பற்றிய ஆய்வின் எண்ணக்கருவாக்கச் சட்டகத்தினை உரு 1 காட்டுகின்றது.

**உரு 1: எண்ணக்கருவாக்கச்சட்டகம்**




மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

### 3.2. தரவு சேகரிப்பு முறை

பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் அவர்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தைக் கண்டறியும் நோக்கில் இவ்வாய்வில் முதலாம் நிலை தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்த தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்களினூடாக சேகரிக்கப்பட்ட தகவல்களும், மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட கிராமசேவகர் பகுதிகளிலுள்ள பெண் சுயதொழிலாளர்களிடம் நேரடி அவதானம் மற்றும் கலந்துரையாடல்களினூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளும் காணப்படுகின்றன. ஆய்வின் நோக்கத்தை அடையும் வகையில் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தானது ஆய்வு மாறிகளான சுயதொழிலாளர்களின் வருமானம், கல்வி, சேமிப்பு, வீட்டுத்துறைக்கான உட்கட்டமைப்பு வசதி, சுகாதாரம், முதலீடு போன்றவற்றை ஆய்வுசெய்யும் வகையில் தயார்செய்யப்பட்டு, ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட பெண் சுயதொழில்முனைவோரிடம் வழங்கப்பட்டன. இரண்டாம் நிலை தரவுகளாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், மண்முனை வடக்கு பிரதேச செயலக புள்ளிவிபர அறிக்கை, புள்ளிவிபர திணைக்கள அறிக்கை, மத்திய வங்கி ஆண்டறிக்கை (2021), இணையம் என்பவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவை காணப்படுகின்றன.

### 3.3. மாதிரிப் பரம்பலும் மாதிரி எடுப்பு முறையும்

மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 48 கிராம சேவகர் பிரிவுகளிலும் உள்ள பெண்தலைமைத்துவக் குடும்பங்களில் 1687 பெண்கள் சுயதொழில் முயற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இங்கு பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகம் காணப்படுகின்ற கருவப்பங்கேணி, நொச்சிமுனை, திராய்மடு, சின்ன ஊறணி, இருதயபுரம் மேற்கு மற்றும் வெட்டுக்காடு ஆகிய ஆறு கிராமசெயலாளர் பிரிவுகளில் பெரும்பாலான பெண்கள் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடாத்த சுயதொழில் முயற்சிகளில் அதிகம் ஈடுபடுபவர்களாகவும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வசிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர் (மண்முனை வடக்கு பிரதேச செயலக அறிக்கை, 2020). இவ் கிராமசேவகர் பிரிவுகளில் இருந்து மொத்தமாக 100 பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் விகிதாசாரரீதியான எழுமாற்று மாதிரி எடுப்பினைப் பயன்படுத்தி மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அட்டவணை 2: ஆய்விற்கான மாதிரித்தெரிவு**

| கிராமசேவகர் பிரிவுகள் | பெண் சுயதொழில் முனைவோரின் மொத்த எண்ணிக்கை | தெரிவுசெய்யப்பட்ட மாதிரி |
|---|---|---|
| கருவப்பங்கேணி | 57 | 16 |
| நொச்சிமுனை | 54 | 15 |
| திராய்மடு | 56 | 15 |
| சின்ன ஊறணி | 75 | 21 |
| இருதயபுரம் மேற்கு | 72 | 20 |
| வெட்டுக்காடு | 45 | 13 |
| மொத்தம் | 359 | 100 |

### 3.4. தரவு மதிப்பீட்டு முறை

100 மாதிரிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் Excel, SPSS கணனி மென்பொருளை பயன்படுத்தி பகுப்பாய்விற்குட்படுத்தப்படுகிறது. Likert scale ஆய்வு

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

முறையினைப் பயன்படுத்தி பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகள் அவர்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பான மாதிரிகளினுடைய திருப்திமட்டமானது மதிப்பீடு செய்யப்படுகின்றது. அவ்மாறிகள் ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய கூற்றுக்கள் பின்வருமாறு மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதாவது, முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன்- 5, ஏற்றுக்கொள்கின்றேன்- 4, ஏற்றுக்கொள்ளவோ மறுக்கவோ இல்லை- 3, ஏற்றுக்கொள்ளவில்லை- 2, முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை- 1. மேலும் சேகரிக்கப்பட்ட தரவுகளின் இடைப்பெறுமானம் குறைவுமட்டம், நடுத்தரமட்டம், உயர்ந்தமட்டம் என்ற வீச்சில் கணிப்பிடப்படுகிறது. வகுப்பாயிடையானது பின்வரும் அளவுகளின் பெறுமானமாக கருத்தில் எடுக்கப்படுகின்றது.

$1 \leq \bar{x} < 2.5$ **குறைந்த அடைவு மட்டம்**

$2.5 \leq \bar{x} < 3.5$ **நடுத்தர அடைவு மட்டம்**

$3.5 \leq \bar{x} \leq 5$ **உயர்ந்த அடைவு மட்டம்**

மேலும் மாறிகளின் நம்பகத்தன்மையை மதிப்பீடுசெய்வதற்காக Cronbach's Alpha பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது குறிப்பிட்ட ஒரு மாறியை அளவீடுசெய்வதற்காக பயன்படுத்தப்பட்ட வினாக்கள் அம்மாறியை மிகச்சரியாக அளவீடு செய்துள்ளதா என்பதை Cronbach's Alpha வைப் பயன்படுத்தி அறிய முடியும். ஒரு மாறியை அளவீடுசெய்வதற்கு Cronbach's Alpha நம்பகத்தன்மையின் குணகம் 0 தொடக்கம் 1 இடையில் காணப்படும். அனைத்து மாறிகளும் ஒன்றுக்கொன்று முற்றிலும் சாராதவையாக இருந்தால் (மாறிகள் இணைமாறற்திறன் தன்மையைப் பகிர்ந்துகொள்ளவில்லை) $\alpha=0$ ஆகக் காணப்படும். மாறாக எல்லா மாறிகளும் அதிக இணைமாறற்றிரன் தன்மையைக் கொண்டிருந்தால் $\alpha$ =1 ஐ நெருங்குவதாகக் காணப்படும். இருப்பினும் பலமுறையியலாளர்கள் குறைந்தபட்ச $CA\ (\alpha)$ குணகம் 0.65 மற்றும் 0.8க்கு இடையில் பரிந்துரைக்கின்றனர். குணகமானது $CA(\alpha)=5$க்கு குறைவாக இருக்கும்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளமுடியாதவையாகக் காணப்படுகின்றன. இவ்வாய்வில் மாறிகளின் நம்பகத்தன்மைப் பகுப்பாய்வு பின்வருமாறு தரவுமதிப்பீட்டின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது (Rout, 1999).

**அட்டவணை 3: தரவுகளின் நம்பகத்தன்மைப் பகுப்பாய்வு மதிப்பீட்டு முறை**

| | |
|---|---|
| $CA>0.9$ | Excellent |
| $0.8< CA\leq 0.9$ | Good |
| $0.7< CA\leq 0.8$ | Acceptable |
| $0.6< CA\leq 0.7$ | Questionable |
| $0.5< CA\leq 0.6$ | Poor |
| CA≤0.5 | Unacceptable |

CA= Cronbach's Alpha

(Source: Rout (1999))

**4. ஆய்வின் முடிவுகளும் கலந்துரையாடலும்**

மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை தீர்மானிக்கும் காரணிகளைக் கண்டறியும் நோக்கில் இவ் ஆய்விற்காக கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளின் படி, மாதிரியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் வயதுப்பரம்பலை பொறுத்தவரையில் பெண் சுயதொழிலாளர்களில் பெரும்பாலானோர் (51%) 41-50

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

வயதுக்கிடைப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். இவர்களின் கல்வித்தகைகைமையை நோக்கினால், இடைநிலை கல்வியை கற்றவர்கள் (57%) அதிகமாகவும், க.பொ.த(உயர்தரம்) கற்றவர்கள் (4%) மிகக் குறைவாகவும் காணப்படுகின்றனர். இங்குள்ள சுயதொழில் முயற்சியாளர்களின் கல்வித் தகைமையயின்படி, பெரும்பாலானோர் சாதாரணதர கல்வித் தகைமையையும் விடக் குறைவான கல்வித் தகைமையை கொண்டிருப்பதனால் இவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடாத்த சுயதொழில் முயற்சியை தெரிவுசெய்துள்ளமை புலனாகிறது. இச்சுயதொழிலாளர்களில் திருமணமாகாதவர்கள் 10 வீதமாகவும், திருமணமானவர்கள் 75 வீதமாகவும், விதவைகள் 9 வீதமாகவும், விவாகரத்து பெற்றவர்கள் 6 வீதமாகவும் காணப்படுகின்றனர். இங்கு 5-6 அங்கத்தவர்களை கொண்ட குடும்பங்களே அதிகளவில் சுயதொழிலை செய்கின்றனர். அதாவது அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படும் போது அனைவரினதும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வருமானம் போதுமானதாக இருப்பதில்லை என்பதனால் 5 - 6 பேரை அங்கத்தவர்களாக கொண்டவர்கள் வருமானத்தினை பெருக்கி கொள்ளும் நோக்குடன் சுயதொழிலில் அதிகம் ஈடுபடுகின்றனர்.

இங்கு வினாக்கொத்துக்களின் ஊடாகப் பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் தாக்கஞ்செலுத்தும் காரணிகளை அளவீடு செய்வதற்காக வருமானம், கல்வி, சுகாதாரம், சேமிப்பு, முதலீடு, உட்கட்டமைப்பு, அசையும் அசையா சொத்து ஆகிய ஏழு மாறிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு அவை தொடர்பான தரவுகள் Likert scale பகுப்பாய்வு மூலம் SPSS மென்பொருளினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு விபரங்கள் பெறப்பட்டன.

### 4.1. நம்பகத்தன்மைப் பகுப்பாய்வு

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகம் காணப்படுகின்ற கருவப்பங்கேணி, நொச்சிமுனை, திராய்மடு, சின்ன ஊறணி, இருதயபுரம் மேற்கு மற்றும் வெட்டுக்காடு ஆகிய ஆறு கிராமசெயலாளர் பிரிவுகளில் பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை தீர்மானிக்கும் காரணிகளை மதிப்பீடு செய்யும் இவ் ஆய்விற்கு கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலம் சேகரிக்கப்பட்ட மாறிகளுக்குரிய நம்பகத்தன்மை மட்டமானது Cronbach's Alphaவைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது. அவற்றின் முடிவுகள் பின்வருமாறு காட்டப்படுகிறது. அதன்படி தனிப்பட்ட அனைத்து மாறிகளினதும் Cronbach's Alpha குணகத்தினடிப்படையில் குறிப்பிட்ட மாறியை அளவீடுசெய்வதற்காக பயன்படுத்தப்பட்ட வினாக்கள் அம்மாறியை மிகச்சரியாக அளவீடு செய்துள்ளன என்ற முடிவுக்கு வரமுடிகின்றது.

**அட்டவணை 04: Cronbach's Alpha நம்பகத் தன்மைப் பகுப்பாய்வு முடிவுகள்**

| மாறிகள் | Cronbach's Alpha |
|---|---|
| உட்கட்டமைப்பு வசதி | 0.904 |
| சேமிப்பு | 0.704 |
| கல்வி | 0.852 |
| வருமானம் | 0.791 |
| சுகாதாரம் | 0.892 |
| முதலீடு | 0.703 |
| அசையும் அசையா சொத்து | 0.871 |

அனைத்து மாறிகளுக்குரிய நம்பகத்தன்மை மட்டமானது பின்வருமாறு காட்டப்படுகிறது. இதன்படி, ஆய்வுமுடிவுகள் நம்பகத்தன்மை வாய்ந்தவை என்ற முடிவுக்கு வரமுடியும்.

*© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.*

அட்டவணை 5: **Reliability Statistics**

| Cronbach's Alpha | N of Items |
|---|---|
| 0.892 | 7 |

**4.2. வருமானம் தொடர்பான மாறியின் பகுப்பாய்வு**

**அட்டவணை 6: வருமானமாறி குறிகாட்டியின் பகுப்பாய்வு முடிவுகள்**

| வருமான மாறி | இடை | நியம விலகல் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| சுயதொழில் மூலம் பெறப்படும் வருமானம் வாழ்க்கையைக் கொண்டு நடாத்தப் போதுமானதாக உள்ளது | 3.51 | 0.904 | 5 | 8 | 28 | 54 | 5 |
| சுயதொழில் மூலம் பெறப்படும் வருமானம் மூலம் நாளாந்த செலவை சமாளிக்கக் கூடியதாக காணப்படுகின்றது | 3.56 | 1.048 | 4 | 14 | 20 | 46 | 16 |
| சுயதொழில் வருமானத்தின் மூலம் கடனை செலுத்தக் கூடியதாக உள்ளது. | 3.43 | 1.066 | 5 | 18 | 17 | 49 | 11 |
| சுயதொழிலால் பெறப்படும் வருமானத்தில் ஒரு பகுதியை சேமிக்கக் கூடியதாக உள்ளது | 3.49 | 1.168 | 8 | 15 | 12 | 49 | 16 |
| சுய தொழில் மூலம் பெறப்படும் வருமானத்தின் மூலம் முதலீடுகளை மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது. | 3.66 | 1.112 | 6 | 11 | 15 | 47 | 21 |
| மொத்தம் | **3.53** | **1.0596** | | | | | |

மூலம்: ஆய்வுத்தரவு, 2021

மேற்குறித்த வருமான மாறியின் பகுப்பாய்வு முடிவுகளின்படி வருமானம் வாழ்க்கையைக் கொண்டு நடாத்தப் போதுமானதாகவுள்ளது (3.51), நாளாந்த செலவை சமாளிக்கக் கூடியதாகவுள்ளது (3.56), சுயதொழில் மூலம் பெறப்படும் வருமானத்தின் மூலம் முதலீடுகளை மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது (3.66) ஆகிய கூற்றுக்களின் சராசரி இடைப் ($\bar{x}$) பகுப்பாய்வு பெறுமானம் $3.5 \leq \bar{x} < 5$ என்ற வீச்சினுள் காணப்படுவதனால் உயர்ந்த நிலையிலும் சுயதொழில் வருமானத்தின் மூலம் கடனை செலுத்தக் கூடியதாக உள்ளது (3.43), சுயதொழிலால் பெறப்படும் வருமானத்தில் ஒரு பகுதியை சேமிக்கக் கூடியதாக உள்ளது (3.49) என்ற கூற்றுக்கள் $2.5 \leq \bar{x} < 3.5$ என்ற வீச்சினுள் காணப்படுவதால் நடுத்தர மட்டத்திலும் தாக்கஞ்செலுத்துகின்றன.

ஆக, ஒட்டுமொத்தமாக நோக்கும்போது வருமான மாறியின் மொத்த பகுப்பாய்வு முடிவுகளிலிருந்து வருமான மாறியின் சராசரி இடைப்பெறுமானம் 3.53 ஆகவும் சராசரி நியம விலகல் பெறுமானம் 1.0596 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு சராசரி இடைப்பெறுமானம் $3.5 \leq \bar{x} \leq 5$ என்ற வீச்சு பெறுமானத்திற்குள் காணப்படுவதால் சுயதொழிலாளர்களின் வருமான

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

மட்டமானது அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்தளவில் தாக்கஞ்செலுத்துவதாக வருமானமாறி தொடர்பான மாதிரிகளின் திருப்திமட்ட முடிவுகள் தொரிவிக்கின்றன. வேறுவகையில்கூறின், சுயதொழில் முயற்சியில் ஈடுபடுகின்ற வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் வருமானத்தினை 96$ இலிருந்த 112$ ஆக அதிகரித்துள்ளது என்ற Rosintan and Kathleen (1999) என்பவர்களின் முடிவோடு பொருந்தக்கூடிய வகையில் இவ் ஆய்விலும் முடிவுகள் பெறப்பட்டுள்ளன. மேலும், இங்கு சுயதொழில் மூலமாக சுயதொழில் முனைவோரின் வருமானம் உயாந்துள்ளதாக ஆய்வு மாதிரிகள் கருதுகின்றபோதிலும் அவை அதிகளவில் பொருட்கள் சேவையை நுகர்வதற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால் மெய்வருமான அதிகரிப்பில் சேமிக்கின்ற அளவு குறைவாகக் காணப்படுகின்றது. இன்றைய சேமிப்பு நாளைய முதலீடு என்பதற்கமைய பெண் சுயதொழிலாளர்களிடையே முதலீடு செய்யவும் தொழிலை விஸ்தரிக்கவும் வருமானம் குறைந்தளவிலேயே பயன்படுத்தப்பட இதுவே முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

**4.3. கல்வி தொடர்பான பகுப்பாய்வு**

**அட்டவணை 7: கல்விக் குறிகாட்டியின் பகுப்பாய்வு முடிவுகள்**

| கல்வி குறிகாட்டி | இடை | நியம விலகல் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| சுய தொழில் மூலம் பெறப்படும் வருமானத்தினைக் கொண்டு பிள்ளைகள் பாடசாலைக்கல்வியை பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. | 3.80 | 1.214 | 5 | 14 | 13 | 32 | 36 |
| பிள்ளைகள் உயர் கல்வியைத் தொடர வழி செய்கிறது | 3.60 | 1.155 | 5 | 16 | 16 | 40 | 23 |
| பிள்ளைகளை பிரத்தியேக வகுப்புக்களிற்கு அனுப்பககூடியதாகவுள்ளது | 3.85 | 1.077 | 2 | 14 | 12 | 41 | 31 |
| பிள்ளைகளின் கல்வியிலும் பெறுபேறுகளிலும் முன்னேற்றம் காணப்படுகின்றது | 3.73 | 1.153 | 5 | 13 | 14 | 40 | 28 |
| சுயதொழில் மூலமான வருமானம் கல்விக்கு உதவியளிக்கின்றது | 3.81 | 1.070 | 3 | 12 | 14 | 43 | 28 |
| மொத்தம் | **3.75** | **1.1338** | | | | | |

மூலம்: ஆய்வுத்தரவு, 2021

கல்வி மாறியின் பகுப்பாய்வு முடிவுகளின்படி பாடசாலைக் கல்வியைப்பெற முடிகின்றது (3.80), உயர்கல்வியைத் தொடர உதவுகின்றது (3.60) கல்விப் பெறுபேறுகளில் முன்னேற்றம் காணப்படுகின்றது (3.73), வருமானம் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவுகின்றது (3.81), பிரத்தியேக வகுப்புக்களிற்கு செல்லக்கூடியதாகவுள்ளது (3.85) ஆகிய கூற்றுக்களின் இடைப்பெறுமானம் $3.5 \leq \bar{x} \leq 5$ என்ற வீச்சுப் பெறுமானத்தில் உயர்மட்டமாக காணப்படுகின்றது. கல்வி மாறியின் மொத்த பகுப்பாய்வு முடிவுகளிலிருந்து கல்வி மாறியின் சராசரி இடைப்பெறுமானம் 3.758 ஆகவும் சராசரி நியம விலகல் பெறுமானம் 1.134 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு சராசரி இடைப்பெறுமானம் $3.5 \leq \bar{x} \leq 5$ என்ற வீச்சு பெறுமானத்திற்குள் காணப்படுவதால் சுயதொழில் முயற்சியினூடாக ஆய்வு மாதிரிகளின் கல்வி தொடர்பான திருப்திமட்டமானது உயர்வாகக் காணப்படுகின்றது. அதாவது

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

ஆய்வுக்காகத் தெரிவுசெய்யபர்பட்ட சுயதொழில் முனைவோர் சுயதொழில் முயற்சியினூடாகக் பிள்ளைகளின் கல்வி மட்டமானது முன்னேற்றமடைந்திருப்பதாகக் கருதுகின்றனர்.

இதேபோன்று கிராமப்புற பெண் தலைமைத்துவ குடும்பங்களின் சமூக பொருளாதார நிலைமை என்ற ஆய்வில் Moepeng and Tisdell (2008) என்பவர்களது முடிவின் படி சுயதொழில் முயற்சியினூடாக வீட்டுத்துறையினரின் கல்விமட்டம் 67 சதவீதமாக அதிகரித்ததுடன் அவர்களின் சமூக பொருளாதார நிலைமையும் உயர்ந்திருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இவ்வாய்விலும் வீட்டுத்துறையினரின் கல்வி மட்டம் முன்னேற்றமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 4.4. சுகாதாரம் தொடர்பான பகுப்பாய்வு

**அட்டவணை 8: சுகாதார குறிகாட்டியின் மொத்த பகுப்பாய்வு முடிவுகள்**

| சுகாதார குறிகாட்டி | இடை | நியம விலகல் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| பெறப்படும் வருமானத்தின் மூலம் போசாக்கான உணவை உண்ணக்கூடியதாக உள்ளது | 3.81 | 1.143 | 5 | 11 | 13 | 40 | 31 |
| சிறந்த வைத்திய ஆலோசனைகளையும் மருத்துவ வசதிகளையும் பெறமுடிகிறது | 3.89 | 1.091 | 4 | 10 | 11 | 43 | 32 |
| பெறப்படும் வருமானத்தினை கொண்டு வீட்டினை சுத்தமாக பேணுவதற்கு பொருட்களை கொள்வனவு செய்யக்கூடியதாக உள்ளது | 3.92 | 1.125 | 3 | 15 | 4 | 43 | 35 |
| மொத்தம் | **3.87** | **1.1196** | | | | | |

மூலம்: ஆய்வுத்தரவு, 2021

மேற்படி, சுகாதார மாறியின் மொத்த பகுப்பாய்வு முடிவுகளிலிருந்து சுகாதார மாறியின் சராசரி இடைப்பெறுமானம் 3.8733 ஆகவும் சராசரி நியம விலகல் பெறுமானம் 1.1196 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு சராசரி இடைப்பெறுமானம் $3.5 \leq \bar{x} \leq 5$ என்ற வீச்சு பெறுமானத்திற்குள் காணப்படுவதால் சுயதொழில் முயற்சியினூடாக சுயதொழிலாளர்களின் சுகாதார நிலை தொடர்பான திருப்திமட்டமானது உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

கானா நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி நுண்கடன் பெற்று சுயதொழிலில் ஈடுபட முன்னர் 37.8 வீதமானவர்கள மட்டுமே நல்ல சுகாதார நிலையில் காணப்பட்டுள்ளனர். ஆனால், நுண்கடனைப் பெற்று சுயதொழிலில் ஈடுபட்டதன் பின்னர் முன்னரிலும் பார்க்க 69.3 வீதமானவர்கள் சிறந்த சுகாதார நிலையில் காணப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது (Ferka, 2011). அந்தவகையில் இவ் ஆய்விலும் பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் சுகாதார நிலையானது சுயதொழில் முயற்சி மூலமாக மேம்பட்டுள்ளதாகக் கருதுகின்றனர்.

### 4.5. சேமிப்பு மாறி தொடர்பான பகுப்பாய்வு

**அட்டவணை 9: சேமிப்பு குறிகாட்டியின் மொத்த பகுப்பாய்வு முடிவுகள்**

| சேமிப்பு குறிகாட்டி | இடை | நியம விலகல் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| சேமிப்பு பழக்கம் அதிகரித்துள்ளது | 3.03 | 0.858 | 5 | 19 | 45 | 30 | 1 |

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சேமிப்பதால் வட்டி வருமானம் கிடைக்கின்றது | 3.49 | 0.916 | 1 | 16 | 26 | 47 | 10 |
| சேமிப்பு முதலீடாக தொழிற்படுகின்றது | 3.38 | 1.090 | 6 | 16 | 25 | 40 | 13 |
| பெற்றுக்கொள்ளப்படும் வருமானம் மூலம் கடன்களிலிருந்து விலக முடிகிறது | 3.78 | 1.069 | 5 | 10 | 10 | 52 | 23 |
| மொத்தம் | **3.42** | **0.9832** | | | | | |

மூலம்: ஆய்வுத்தரவு, 2021

மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணையின்படி சேமிப்பு பழக்கம் அதிகரித்துள்ளது (3.03), வட்டி வருமானத்தை பெற முடிகின்றது (3.49), சேமிப்பு முதலீடாக தொழிற்படுகின்றது (3.38) ஆகிய கூற்றுக்களின் இடைப்பெறுமானது $2.5 \leq \bar{x} < 3.5$ என்ற வீச்சினுள் நடுத்தர மட்டத்தில் காணப்படுகின்றன. இதற்கு அவர்களிடத்தில் சேமிப்பு மற்றும் வங்கிப்பழக்கம் குறைவாக இருப்பதும் காரணமாகலாம். மேலும், பெற்றுக்கொள்ளப்படும் வருமானம் மூலம் கடன்களிலிருந்து விலக முடிகிறது (3.78) என்ற கூற்றின் இடைப்பெறுமானம் மட்டும் உயர்மட்டத்தில் **காணப்படுகின்றது.** இதற்கு காரணம் சீட்டு மற்றும் உண்டியல்களில் சிறிதளவில் சேமிக்கப்படும் பணத்தினை பெற்று கடனை செலுத்துவதாலாகும்

மேற்படி சேமிப்பு தொடர்பான மாறியின் மொத்த பகுப்பாய்வு முடிவுகளிலிருந்து சேமிப்பு மாறியின் சராசரி இடைப்பெறுமானம் 3.42 ஆகவும், சராசரி நியமவிலகல் பெறுமானம் 0.9832 ஆவும் காணப்படுகின்றது. இங்கு சராசரி இடைப்பெறுமானம் $2.5 \leq \bar{x} < 3.5$ என்ற வீச்சு பெறுமானத்திற்குள் காணப்படுவதால் சுயதொழில் முயற்சியினூடாக சுயதொழில்முனைவோரின் சேமிப்பு தொடர்பான மாறியின் திருப்தி நிலையானது நடுத்தர மட்டத்தில் காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இது சுயதொழில் முயற்சியாளர்களிடையே சேமிப்பு பழக்கம் எதிர்பார்த்த அளவை விடக் குறைவாக உள்ளதை புலப்படுத்துகிறது.

### 4.6. முதலீடு தொடர்பான பகுப்பாய்வு முடிவுகள்

**அட்டவணை 10: முதலீட்டு மாறியின் பகுப்பாய்வு முடிவுகள்**

| முதலீட்டு குறிகாட்டி | இடை | நியம விலகல் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| சுயதொழில் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் வருமானம் மீண்டும் முதலீடு செய்யப்படுகிறது. | 3.06 | 1.196 | 10 | 25 | 27 | 25 | 13 |
| மீண்டும் முதலீடு செய்யப்படுவதனால் உற்பத்தி அதிகரிக்கின்றது. | 3.48 | 1.118 | 7 | 34 | 32 | 26 | 01 |
| முதலீட்டின் மூலம் முன்னரிலும் பார்க்க வருமானம் அதிகரிக்கின்றது. | 3.39 | 1.147 | 4 | 05 | 39 | 52 | 00 |
| தொழிலை விஸ்தரிப்பதற்கு சொத்துக்களை அதிகரிக்க கூடியதாகவுள்ளது. | 3.53 | 1.01 | 2 | 14 | 31 | 35 | 18 |
| மொத்தம் | **3.365** | **1.1985** | | | | | |

மூலம்: ஆய்வுத்தரவு, 2021

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

முதலீட்டுமாறியின் பகுப்பாய்வு முடிவுகளின்படி, மீள் முதலீட்டினால் உற்பத்தி முன்னரிலும் பார்க்க அதிகரிக்கின்றது (3.48), வருமானம் மேலும் அதிகரித்துள்ளது (3.39), சுயதொழில் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் வருமானம் மீண்டும் முதலீடு செய்யப்படுகிறது (3.06), ஆகிய கூற்றுக்களின் இடைப்பெறுமானம் $2.5 \leq \bar{x} < 3.5$ என்ற வீச்சுப் பெறுமானத்தினுள் காணப்படுவதால் இக்கூற்றுக்களின் ஏற்றுக்கொள்ளல் நிலை நடுத்தரமட்டமாக காணப்படுகின்றது. இங்கு தொழிலை விஸ்தரிப்பதற்கு சொத்துக்களை அதிகரிக்க கூடியதாகவுள்ளது (3.53), என்ற கூற்றின் இடைப்பெறுமானம் மட்டும் $3.5 \leq \bar{x} \leq 5$ வீச்சினுள் உயர்மட்டத்தில் மாறிகளின் திருப்திநிலை காணப்படுகின்றது.

இங்கு முதலீட்டு மாறியின் மொத்தப் பகுப்பாய்வு முடிவுகளின்படி முதலீட்டின் சராசரி இடைப்பெறுமானம் 3.365 ஆகவும் சராசரி நியமவிலகல் பெறுமானம் 1.1985 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு சராசரி இடைப்பெறுமானம் $2.5 \leq \bar{x} < 3.5$ என்ற வீச்சினுள் காணப்படுவதால் சுயதொழில் முயற்சியினூடாக சுயதொழில் முனைவோரின் வாழ்க்கைத்தர முன்னேற்றத்துக்கு முதலீட்டு மட்டம் தொடர்பான தொழில்முனைவோரின் திருப்தி மட்டமானது நடுத்தரமட்டத்திலுள்ளமை இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

### 4.7. வீட்டுத்துறைக்கான உட்கட்டமைப்பு வசதி குறிகாட்டிகளின் முடிவுகள்

**அட்டவணை 11: வீட்டுத்துறைக்கான உட்கட்டமைப்பு வசதி குறிகாட்டியின் மொத்த பகுப்பாய்வு**

| உட்கட்டமைப்பு குறிகாட்டி | இடை | நியம விலகல் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| குடிநீர் நாளாந்தம் கிடைக்கின்றது. | 4.14 | 1.045 | 4 | 7 | 3 | 43 | 43 |
| வீட்டின் அங்கத்தவர்களுக்கு போதுமான வீட்டு வசதிகள் உள்ளன. | 4.00 | 1.092 | 6 | 6 | 5 | 48 | 35 |
| ஒழுங்கமைக்கப்பட்ட கழிவறை வசதி உள்ளது. | 4.10 | 1.020 | 4 | 6 | 5 | 46 | 39 |
| மின்சார வசதி காணப்படுகின்றது | 3.80 | 1.082 | 5 | 7 | 19 | 41 | 28 |
| தொலைபேசி வசதி காணப்படுகின்றது. | 3.94 | 1.023 | 4 | 7 | 10 | 49 | 30 |
| மொத்தம் | **3.99** | **1.0524** | | | | | |

மூலம்: ஆய்வுத்தரவு, 2021

மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணையின்படி கூற்றுக்களின் இடைப்பெறுமானம் $3.5 \leq \bar{x} \leq 5$ என்ற வீச்சிற்குள் உயர்மட்டத்தில் காணப்படுகின்றது. இதற்கு சுயதொழிலின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதும் உட்கட்டமைப்பு வசதியானது வாழ்க்கைக்கு முக்கியம் எனக்கருதுவதும் காரணமாக அமையலாம். உட்கட்டமைப்பு மாறியின் மொத்த பகுப்பாய்வு முடிவுகளிலிருந்து உட்கட்டமைப்பு மாறியின் சராசரி இடைப்பெறுமானம் 3.9960 ஆகவும் சராசரி நியம விலகல் பெறுமானம் 0.8953ஆகவும் காணப்படுகின்றது. இங்கு சராசரி இடைப்பெறுமானம் $3.5 \leq \bar{x} \leq 5$ என்ற வீச்சு பெறுமானத்திற்குள் காணப்படுவதால் சுயதொழில்முயற்சியினூடாக சுயதொழிலாளர்களின் உட்கட்டமைப்பு நிலையானது முன்னேற்றமடைந்துள்ளமைதொடர்பான தொழில்முனைவோரின் திருபதி மட்டமானது உயர்ந்த மட்டத்திலுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதாவது

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

சுயதொழில் முயற்சியினூடாக சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றமடைவதில் வீட்டுத்துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகள் அதிகம் தாக்கஞ்செலுத்துவதாக தொழில்முனைவோர் கருதுகின்றனர்.

**4.8. அசையும் அசையா சொத்து**

**அட்டவணை 12: அசையும் அசையா சொத்து குறிகாட்டியின் மொத்த பகுப்பாய்வு முடிவுகள்**

| அசையும் அசையா சொத்து குறிகாட்டி | இடை | நியம விலகல் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| சுயதொழில் வருமானத்தின் மூலம் அசையும் அசையா சொத்துக்களை கொள்வனவு செய்யக்கூடியதாக உள்ளது. | 4.11 | 1.053 | 5 | 4 | 8 | 41 | 42 |
| சுயதொழில் வருமானத்தின் மூலம் அசையும் அசையா சொத்துக்களை விருத்தி செய்யக்கூடியதாக உள்ளது. | 4.08 | 1.022 | 3 | 7 | 9 | 41 | 40 |
| சுயதொழில் வருமானத்தின் மூலம் அசையும் அசையா சொத்துக்களை பராமரிக்கக்கூடியதாக உள்ளது. | 4.06 | 1.090 | 5 | 6 | 8 | 40 | 41 |
| மொத்தம் | **4.08** | **1.055** | | | | | |

மூலம்: ஆய்வுத்தரவு, 2021

மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணையின்படி கூற்றுக்களின் இடைப்பெறுமானம் $3.5 \leq \bar{x} \leq 5$ என்ற வீச்சிற்குள் உயர்மட்டத்தில் காணப்படுகின்றது. இதற்கு சுயதொழிலின் மூலம் அசையும் அசையா சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதும் தொழிலுக்கு சொத்துக்கள் முக்கியமாக இருப்பதும் காரணமாகலாம். அசையும் அசையா சொத்து மாறியின் மொத்த பகுப்பாய்வு முடிவுகளிலிருந்து அம்மாறியின் சராசரி இடைப்பெறுமானம் 4.0833 ஆகவும் சராசரி நியம விலகல் பெறுமானம் 1.055 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு சராசரி இடைப்பெறுமானம் $3.5 \leq \bar{x} \leq 5$ என்ற வீச்சு பெறுமானத்திற்குள் காணப்படுவதால் சுயதொழில் முயற்சியினூடாக சுயதொழில்முனைவோரின் அசையும் அசையா சொத்துக்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பான திருப்தி மட்டமானது உயர்ந்த மட்டத்தில் காணப்படுவது புலனாகின்றது.

**4.9. வாழ்க்கைத்தரம்**

பெண் சுயதொழிலாளர்களில் 100 பேரை மாதிரியாக தெரிவு செய்து வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட முடிவுகளின் படி சுயதொழில் முயற்சியினூடாக உயர்ந்தளவு அடைவு மட்டத்தை 58 வீதமானவர்களும் நடுத்தர வாழ்க்கைத்தர மட்டத்தினை 42 வீதமானவர்களும் வெளிப்படுத்தியுள்ளனர்.

தரவுப் பகுப்பாய்வின் போது வருமானம், கல்வி, சுகாதாரம், சேமிப்பு, முதலீடு, உட்கட்டமைப்பு வசதி, அசையும் அசையா சொத்துக்கள் ஆகிய அனைத்து மாறிகளையும் மதிப்பீடு செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட சராசரிப் பெறுமானங்களின் அடிப்படையில் இவற்றின் முழுமொத்த சராசரி பெறுமதி 3.715 ஆகவும் நியம விலகல் பெறுமதி 1.0860 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு அனைத்து மாறிகளினதும் சராசரி இடைப்பெறுமானம் $3.5 \leq \bar{x} \leq 5$ என்ற வீச்சினுள்

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

காணப்படுவதால் பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரமானது சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு வருமானத்தை பெருக்கிக்கொண்டதன் வாயிலாக முன்னரிலும் பார்க்க உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதாகத் பெண் சுயதொழில்முனைவோர் கருதுகின்றனர்.

**அட்டவணை 13: ஆய்வு மாறிகளின் இடை மற்றும் நியமவிலகல்**

| மாறிகள் | மாறிகளின் சராசரி இடைப் பெறுமானம் | சராசரி நியம விலகல் | வாழ்க்கைதரத்தின் மீதான தாக்கம் |
|---|---|---|---|
| உட்கட்டமைப்பு வசதி | 3.99 | 1.0524 | உயர்ந்த மட்டம் |
| சேமிப்பு | 3.42 | 0.9832 | நடுத்தர மட்டம் |
| கல்வி | 3.75 | 1.1338 | உயர்ந்த மட்டம் |
| வருமானம் | 3.53 | 1.0596 | உயர்ந்த மட்டம் |
| சுகாதாரம் | 3.87 | 1.1196 | உயர்ந்த மட்டம் |
| முதலீடு | 3.365 | 1.1985 | நடுத்தர மட்டம் |
| அசையும் அசையா சொத்து | 4.08 | 1.055 | உயர்ந்த மட்டம் |
| முழுமொத்த சராசரி பெறுமதி | 3.715 | 1.0860 | |

## 5. முடிவுரை

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் அதிகம் வாழும் கருவப்பங்கேணி, நொச்சிமுனை, திராய்மடு, சின்ன ஊறணி, இருதயபுரம் மேற்கு மற்றும் வெட்டுக்காடு ஆகிய ஆறு கிராமசெயலாளர் பிரிவுகளை மையமாகக் கொண்டு பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகள், அவர்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தும் தாக்கம்தொடர்பான மாதிரிகளின் திருப்திநிலையைக் கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வினூடாக பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை தீர்மானிக்கும் காரணிகளாக வீட்டுத்துறைக்கான உட்கட்டமைப்பு வசதி, அசையும் அசையா சொத்து, கல்வி, சுகாதாரம், வருமானம், சேமிப்பு, முதலீடு போன்றன மாறிகளின் நம்பகத் தன்மைப் பகுப்பாய்வினூடாகக் கண்டறியப்பட்டுள்ளன.

இங்கு ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட மாறிகளில் ஒன்றாகிய அசையும் அசையா சொத்து மாறியானது ஏனைய மாறிகளைக் காட்டிலும் மிக உயர்ந்த மட்டத்தில் தாக்கஞ்செலுத்துகிறது. இதன் இடைமதிப்பீடானது 4.08ஆக காணப்படுகின்றது. பகுப்பாய்வு முடிவின்படி ஆய்வு செய்யப்பட்டவர்களில் 85 வீதமானவர்களின் உட்கட்டமைப்பு வசதி மட்டம் உயர்வடைந்து காணப்படுன்றது. இவ் அதிகரிப்பிற்கு பிரதான காரணம் வருமானத்தில் பெரும் பகுதி அசையும் அசையா சொத்துக்களின் கொள்வனவிற்காக பயன்படுத்தப்படுவதாகும்.

இங்கு மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களில் 52 வீதமானவர்களின் வருமான மட்டமானது உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இவ் ஆய்வு முடிவின்படி சுயதொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி நிலையானது 3.75 என்ற இடைமதிப்புடன் உயர்ந்த மட்டத்தில் தாக்கஞ்செலுத்துகிறது. இங்கு வினாக்கொத்துக்களினூடாகப் பெறப்பட்ட முடிவுகளின் பிரகாரம் 72 வீதமானவர்களின் கல்வி மட்டமானது உயர்மட்டத்தில் காணப்படுகின்றது. இதற்கு பிரதான காரணம் கல்வியின் முக்கியத்துவம் அதிகரித்தமையினால் கல்விக்காக செலவிடும் அளவிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பெற்றோர் தமது பிள்ளைகளை பிரத்தியேக வகுப்பிற்கு அனுப்பக் கூடியதாகவுள்ளதோடு உயர் கல்வியையும் பெற்றுக் கொடுக்க கூடியதாகவுள்ளது. மேலும், கற்றலுக்கான சூழ்நிலை பெற்றோர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆக,

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

சுயதொழில் முனைவோரின் வாழ்க்கைத்தரத்தில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகளில் கல்வியும் வருமானத்தைப் போன்று உயர்ந்தளவில் தாக்கஞ்செலுத்துவது புலனாகிறது.

ஆய்வின்படி சுயதொழில் முனைவோரின் வாழ்க்கைத்தரத்தை தீர்மானிக்கும் காரணிகளை மதிப்பீடு செய்வதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட மாறிகளில் ஒன்றாகிய சுகாதார மாறியானது பெண் சுயதொழிலாளர்களின் சுகாதாரம் உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதை வெளிப்படுத்துகிறது. இங்கு இடைமதிப்பீடானது 3.87ஆக காணப்படுகின்றது. பகுப்பாய்வு முடிவின்படி ஆய்வு செய்யப்பட்டவர்களில் 78 வீதமானவர்களின் சுகாதார மட்டம் உயர்வடைந்து காணப்படுன்றது. இவ் அதிகரிப்பிற்கு பிரதான காரணம் வருமானத்தில் பெரும் பகுதி போஷாக்கான உணவை நுகர்வதிலும், சிறந்த வைத்திய ஆலோசனைகள் பெற்றுக் கொள்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

ஆய்வு முடிவின்படி சேமிப்பு மட்டமானது 3.42 என்ற இடைமதிப்புடன் நடுத்தரமட்டத்திலேயே காணப்படுகின்றது. இங்கு அதிகரிக்கப்பட்ட வருமானம் கல்வி மற்றும் சுகாதார வசதிகள் போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்காக செலவிடப்படுகின்றமை, சேமிப்பு பற்றி அவர்கள் அக்கறை கொள்ளாமை, சேமிப்பு தொடர்பான விளக்கமின்மை போன்ற காரணங்களால் சேமிக்கும் தன்மை குறைவாக காணப்படுகின்றது. ஆய்வு முடிவின்படி முதலீட்டு மட்டானது 3.365 என்ற இடைமதிப்புடன் நடுத்தர மட்டத்தில் காணப்படுகின்றது. 50 வீதமானவர்களின் முதலீட்டு மட்டமானது நடுத்தர மட்டமாக காணப்படுகின்றது. இது ஏனைய காரணிகளை விட குறைவான மட்டத்தில் பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் தாக்கங்செலுத்துவதாக தொழில்முனைவோர் கருதுகின்றனர்.

ஒட்டு மொத்தமாக நோக்குகின்றபோது இவ்வாய்வின் முடிவின்படி மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் பெண் சுயதொழிலாளர்களின் வாழ்க்கைத் தரமானது சுயதொழில் முயற்சியினூடாக முன்னேற்றமடைந்திருப்பதாக தொழில்முனைவோர் கருதுகின்றனர். ஆய்வு முடிவுகளின்படி, வீட்டுத்துறைக்கான உட்கட்டமைப்பு வசதி, அசையும் அசையா சொத்து, கல்வி, சுகாதாரம், வருமானம் போன்ற காரணிகள் உயர்மட்டத்திலும் சேமிப்பு மற்றும் முதலீடுகள் நடுத்தர மட்டத்திலும் சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் தாக்கஞ்செலுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. ஆக, மொத்தரீதியாக பார்க்கும்போது சுயதொழில் முயற்சியானது மக்களின் வாழ்க்கைத்தரத்தினை முன்னேற்றுவதில் முக்கிய பங்காற்றுகின்றது என்ற இறுதி முடிவிற்கு வரலாம்.

### 6. ஆய்வின் பரிந்துரைகள்

இவ்வாய்வில் தொழில்முனைவோரிடையே குறைவாகக் காணப்படுகின்ற சேமிப்பு மற்றும் முதலீட்டுப் பழக்கத்தினை ஊக்குவிக்கக்கூடிய வகையில் சிபார்சுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

- மக்களிடத்தில் சேமிப்பு சம்பந்தமான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும். வங்கிகளில் சேமிப்பதால் எதிர்காலத்தில் கிடைக்கும் பயன்களை பற்றி அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும்.
- வருமானத்தில் ஒரு பகுதியை முதலிடுவது பற்றி ஆலோசனை வழங்க வேண்டும்.
- சுயதொழிலுக்கான கடனை வழங்கும் போது பகுதி பகுதியாக சுயதொழில் வளர்ச்சி கட்டங்களுக்கு ஏற்ப வழங்கவேண்டும்.
- உதவிகளை வழங்கும் போது ஒரேமாதிரியான சுயதொழில் முயற்சிகளுக்கு கடன்வழங்காது வருமானத்தை அதிகரிக்க கூடிய புதிய தொழில் முயற்சிகளுக்கு வழங்க வேண்டும்.
- சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவோர் தொழிநுட்ப அறிவை கொண்டிருப்பது மிகவும் அவசியமாகும். சந்தையில் போட்டியை அதிகமாக எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில்

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved. 

தொழிநுட்ப ரீதியான அறிவு சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு மிகவும் அவசியமாகும். இதற்கு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

- பயிற்சி பெறும் தடவைகளை அதிகரிக்கப்பதோடு உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
- வருமானத்தின் சிறுபகுதியை முதலீட்டிற்கான சேமிப்பாக வைத்துக் கொள்ளல் வேண்டும் என ஆலோசனை வழங்க வேண்டும்.
- சுயதொழிலாளர்களுக்கு வட்டியில்லா கடன் நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும்.

**உசாத்துணைகள்**

Abd Rani, S. H., & Hashim, N. (2015). Factors that influence women entrepreneurial success in Malaysia: A conceptual framework. International Journal of Research in Business Studies and Management, Volume 4, Issue 1, January 2017, 16-23. (Online) http://dx.doi.org/10.22259/ijrbsm.0401003.

Ayuub, S. (2013). Impact of microfinance on poverty alleviation. A case study of NRSP in Bahawalpur of Pakistan. International Journal of Academic Research in Accounting, Finance and Management Sciences, 3(1), 119-135.

Central Bank Special Appendix (2019), Central Bank of Sri Lanka, Colombo.

Central Bank Special Appendix (2020), Central Bank of Sri Lanka, Colombo.

Central Bank Special Appendix (2021), Central Bank of Sri Lanka, Colombo.

Ferka, A. (2011). The impact of microfinance on the livelihoods of women in rural communities: a case study of Jaman South District, Ghana. BA MGT STDS thesis, University of Cape Coast, Ghana.

Hussain, D., & Yaqub, M. Z. (2010). Micro-entrepreneurs: Motivations Challenges and Success Factors. International Research Journal *of Finance and Economics*(56).

Household Income and Expenditure Report (2016), Central Bank of Sri Lanka, Colombo.

International Labour Organization – ILO (2007). ABC of Women Workers’ Rights and Gender Equality. Available at: http://www.ilo.org/wcmsp5/groups/public/---dgreports/---gender/documents.

Khan, M. A., & Rahaman, M. A. (2007). Impact of microfinance on living standards, empowerment and poverty alleviation of poor people: a case study on microfinance in the Chittagong District of Bangladesh.

Moepeng, P. T., & Tisdell, C. A. (2008). The socio-economic situation of female heads and poor heads of households in rural Botswana: A village case study (No. 1745-2016-141031).

Ummah, S., & Gunapalan, S. (2012). Factors influencing on entrepreneurial success: an empirical study on women headed families in Ampara and Batticaloa districts in Sri Lanka. *International Journal of Business, Economics and Law*, *1*(1), 141-148.

© *Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.* 

Srivastava, M., Essay on Women Empowerment (2009). Available at SSRN: https://ssrn.com/abstract=1482560 or http://dx.doi.org/10.2139/ssrn.1482560

Solhi, M., Hamedan, M. S., & Salehi, M. (2016). Relationship between quality of life of women-headed households and some related factors in Iran. Glob J Health Sci, 8(10), 56241.

Statistical Report of Manmunai North Divisional Secretariat (2021),Planning Department, Manmunai North Divisional Secretariat, Batticaloa.

Thilepan, M., & Thiruchelvam, S. (2011). Microfinance and livelihood development in poor coastal communities in Eastern Sri Lanka. Tropical Agricultural Research, 22(3).

Tilakaratna, G., Wickramasinghe, U. and, Kumara, U. (2005), Microfinance in Sri Lanka: Ahousehold level analysis of outreach and impact on poverty.

World Bank (2007), Global Monitoring Report: Millennium Development Goals, Confronting the Challenges of Gender Equality and Fragile States. World Bank, Washington, DC.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.